சற்குருப்யோ நம:

திருக்காளத்தி

# ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச் செய்த நாநா ஜீவ வாதக் கட்டளை.

இது

திருப்பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய சுவாமிகளால்

மதுரை

இந்துஸ்தாந் பிரிண்டிங் ஆபீஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1950

# சிறப்புப் பாயிரம்.

இப்பியி னிடையே யெழும்பிர சதம்போ
　　லென்றுமா யிலகியின் பாகி,
யொப்பிட வேது மின்றிய பிரமத்
　　துற்றிடும் பகுதிமுன் னுய,
அப்பிர பஞ்ச முறைமையைத் தூல
　　வருந்ததி நியாயமே யென்னச்,
செப்பினன் யாருந் தெளிவுறச் சேஷாத்
　　திரிசிவ னென்னுமா தவனே.

இதில் உள்ள ஒன்பது நூல்கள்.

1. நாநா ஜீவ வாதக் கட்டளை வசநம்.
2. கீதா சாரத் தாலாட்டு கவி 106.
3. சசி வர்ந போதம் கவி 112.
4. மகா ராஜத் துறவு கவி 128.
5. பக்தி (வைராக்ய) சதகம் கவி 100.
6. வைராக்ய தீபம் கவி 101.
7. பிரஹ்ம நாமாவலி(லக்ஷணாவிருத்தி) கவி 115.
8. வேதாந்த சூடாமணி கவி 185
9. கைவல்ய நவநீதம் கவி 288.

நூல் எட்டுக்கு ஆகக் கவி (1135).

10. விவேக சூடாமணி கவி 671
11. அஞ்ஞ வதைப் பரணி கவி 494

ஆகக் கவி (1165).

12. பஞ்ச தசி கவி 805.

---

13. ஈசுவர கீதை கவி 338.
14. பகவற் கீதை கவி 545.
15. பிரஹ்ம கீதை கவி 547.

ஆகக் கவி (1430).

16. வாசிட்டம் கவி 2055.

ஆக 15 க்குக் கவி (6590.)

 

## கோவிலூர் மடத்தில் பாடம் நடக்கும் 16 நூன் முறை

### ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய சுவாமிகள் இயற்றியது

தாங்குறுநா நாசீவ வாதக்கட் டணைகீ தாசாரத்
தாலாட்டுச் சசிவங்க போதம், வாக்குமகாராஜதுற
வுபக்கிரத கம்நல் வைராக்ய தீபமிலக் கணை
விருத்தி யரிய. வாக்கஞ்ஞ வதைப்பரணி
வேதாந்த சூடா மணிவிவே கசூடா மணிபஞ்ச
தசியும், பாக்கமழ்கை வல்யநவ நீதமீ சுரகீதை
பகவற்கீ தைபிரம கீதைவா சிட்டமே.

—○○—

## திரு வண்ணா மலை-ஈசாந்ய மடம்

### ஸ்ரீ நடேச சுவாமிகள் இயற்றியன.

—○○—

கட்டளைதா லாட்டுக் கருதுபோ தந்துறவு,
சீட்டருக்கா குஞ்சதகந் தீபநூற் - றெட்டுடைய,
பேரிலக்க ணைவிருத்தி பீடுடைச்சூ டாமணிதன்,
னேரிலக்கி யங்கைவல்லி யம்.

பஞ்சதசி ஞானப் பரணி விவேகமணி,
யெஞ்சலிலா வுந்தி யிறைகீதை – செஞ்சொலாற்,
கண்ணனருள் கீதை கமலத்தோன் கீதைமநத்,
தண்ணமறு வாசிட்ட மெட்டு.

ஒன்பது நூல், எட்டு நூல், ஆக நூற் பதி னேழு.

—○○—

## பிழை திருத்தம்

| பக்கம் வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|

### 1. நாநா ஜீவ வாதக் கட்டளை.

| | |
|---|---|
| 11—9 | மானபடியிய்—மானபடியால். |
| 24—19 | சீங்குவையும்—சிங்குவையும். |

### 2. கீதா சாரத் தாலாட்டு.

| | |
|---|---|
| 4—5 | சுற்றி மறிற்—சுற்ற மறிற். |
| 11—3 | ஞானத்தாறலும்—ஞானத்தா லறும் |
| 11—8 | விளக்குமோ—விளங்குமோ. |
| 18—15 | சொல்வதுவு—செல்வதுவு. |
| 21—13 | வெட்டஞ்ஞான—வெட்டு அஞ்ஞான. |
| ,, ,, | மித்தை யயல்—மித்தை அயல். |
| 22—4 | கானலறி—கானல் அறி. |
| ,, 5 | சிரந்தி—சிறந்தி. |
| ,, 13 | மன்னிப்போர்—மநநிப்போர் |
| 23—16 | ஏகாந்தா—ஏகந்தா. |
| 24—10 | தெரிந்தவற்குத்—தெரிந்தவர்க்குத். |
| 25—15 | மநமக்கம்—மநமயக்கம். |

பக்கம் வரி பிழை திருத்தம்

## 3. சசி வந்ந போதம்.

4—4 மென்று—மொன்று.
,,—6 முதல்வற்கு—முதல்வர்க்கு.
6—8 னேவும பணி—னேவும் பணி.

## 4. மகா ராஜத் துறவு.

16—5 வெண்டேன்—வேண்டேன்.
17—10 துங்களுக்குக்குல—துங்களுக் குலக.
18—3 முள மொழு—முளபொழு.
,, 6 விளையுள—விளையுள.
22—14 வுன்ணி—வுன்னி.
36—17 யொரை—யோரை.
46—5 தருக்கினர்—தருக்கிளர்.
48—6 குழைபஞ்ச—குழைமஞ்ச.
,, 11 ஆண்டாதி—ஆண்ட ஆதி.
,, 12 மற்றவர்—மற்று அவர்.
,, 14 வேந்தாரசன்—வேந்த அரசன்.
49—12 இந்த அரி—இந்த அரு.

## 5. பக்தி (வைராக்ய) சதகம்.

3—9 தாளையேதா—தாளையேதர.

| பக்கம் வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 16—16 | கண்மணிதளை | கண்மணிதனை. |

## 6. வைராக்ய தீபம்.

| | | |
|---|---|---|
| 14—11 | நானெலு | நானெனு. |
| 15—3 | நாணென | நானென. |
| 17—14 | வெறுத்தவர் | வெறுத்தவா. |
| 33—3 | னருந்துத் | னருந்துத. |
| ,, 15 | டதிகமேன் | டதிகமென். |
| 34—3 | மல்லலது | மல்லது. |
| 40—19 | திடுதடி | திடுதலி. |
| 41—19 | வடையவும் | லடையவும். |

## 7. லக்ஷணவிருத்தி.

| | | |
|---|---|---|
| 20—12 | யுறாதலானும் | யுறுதலானும். |
| 22—10 | சுககப் | சுகப். |
| 23—15 | ரோவாய் | ரோர்வாய். |
| 32—9 | சீவனற்ஞெழி | சீவனற் றொழி. |
| 40—17 | யூக | யூந. |
| 45—13 | மெக்காலத்து | மெக்காலத்தும். |

| பக்கம் வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 50—19 | வமரதல் | வமர்தல். |
| 51—18 | மறுசிருஷ்டி | மருசிருஷ்டி. |
| 63–15 | நினைதவனி | நினைவதனி. |
| 69–13 | சான்திஅப்பி | சாதியின் அப்பி. |
| ,, 18 | தநதாநீ | தநதாநி |
| 70–8 | சீவனற்றோ | சீவனற்றொ. |
| 71–18 | நிட்ப்பரபிர | நிட்ப்பிர்பிர. |

## 8. வேதாந்த சூடாமணி.

| | | |
|---|---|---|
| 24–18 | முறைப்பாம் | முனாப்பாம். |
| 28–9 | செய்யாமை | செய்யாமை. |
| 33–2 | கிரிகாணு | கிரிகரணு. |
| 41–4 | துரியாதி | துரியாதீ. |
| 46–12 | தற்னசதங்ய | தற்சைதங்ய. |
| 47–5 | பளிங்கு மனி | பளிங்கு மணி. |
| 48–18 | வசைப்யடுதலூறுஞ் | வசைப்படுதலுறுஞ். |
| 53–8 | விடைச்சேரி | விடைச்சேரி. |
| 72–8 | லுயிர் பிரசா | லுயர் பிரசா. |

| பக்கம் வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|

## 9. கைவல்ய நவநீதம்.

| | | |
|---|---|---|
| 7–3 | மெண்ரூன் | மென்ருன். |
| 15–14 | யென் யார் | யென்பார். |
| 28–3 | போற்றி | போற்றி போற்றி. |
| 36–11 | புகழும் | புகலும். |
| 42–1 | தத்துவ விளக்கப்-2 சந்தேகந் தெளிதற் | |
| 43–9 | றுறைத்தவனே | றுரைத்தவனே. |
| 46–17 | வரு வுண்ணிய | வபுருண்ணிய. |
| 48–12 | யிரண்டுமோ | யிரண்டுமோர். |
| 53–16 | நாசமாக்கிய | நாசமாகிய. |
| 58–15 | மிச்சிறங்களாற் | மிச்சிரங்களாற். |
| 62–3 | மிகுத்த | மிகுந்த. |
| 68–5 | புவநமப் | புவநமிப். |
| ,,–15 | நினைத்திடா | நினைந்திடா. |
| 69–11 | கிடிலங்கப் | கிடிலந்தப். |
| 72–5 | னென்னலிவன் | னென்னவிவன். |
| 76–11 | தாங்குப் | தாங்கும். |
| 93–13 | பார்த்தது | பார்த்தநு. |

# நாநா ஜீவ வாதக் கட்டளை.

காப்பு.

ஆனைமுக னறுமுக னம்பிகைபோன் னம்ப
ஞானகுரு வாணியையு ளுடு. [லவன்

சுத்தப் பிரமமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியி னிடத்திலே, அக்கினியிற் சூடு போல அபிந்நமாக ஒரு சத்தி உண்டு; அந்தச் சத்தி அவ் ...தப் பிரமத்தில் அடங்கி யிருக்கும் போது அதற்குச் சுத் தப் பிரம மென்று பெயர். இந்தச் சத்தி விசிரிம் பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும் போது அப் பிரமம் பரை வியாபகத்துக்குள் இருந்தபடியி னாலே,அதற்குப் பரைப் பிரம மென்று பெய ராம். இலக்ஷண சூந்யமா யிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தி னுடைய சந்நிதாநத்தில் புருட சமுகத் திலே ஸ்திரீக்கு இன்பஞ் சநித்தாற் போல, அவி கிர்த சத்துவ ரஜஸ் தமோ குணங்கள் உண்டா

யின. இவற்றில், சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூப சத்தி யென்று பெயர். சுத்த ரஜஸிற்குச் சித் ரூப சத்தி யென்று பெயர். சுத்த தமஸிற் குச் சத் ரூப சத்தி யென்று பெயர். இவற்றில், காரண மான ஆநந்த ரூப சத்தியுடனே பரைப் பிரமங் கூடிச் சர்வாநந்த மென்னுஞ் சுழுத்தி யவஸ்தையை யடைகின்ற போது, பரைப் பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமாநந்த ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரமாநந்தர் சித் ரூப சத்தியுடனே கூடிச் சர்வப் பிரகாச மென்னுஞ் சொப்பநாவஸ்தையை யடைகின்றபோது, பரமா நந்த ரென்னும் பெயர் போய்த் தேசோமய ரென் னும் பெயர் வந்தது. இந்தத் தேசோ மயர் சத் ரூப சத்தியுடனே கூடிச் சர்வ வியாபக மென் னுஞ் சாக்கிராவஸ்தையை யடைகின்ற போது தேசோ மய ரென்னும் பெயர் போய்ப் பரிபூரண ரென்னும் பெயர் வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிர மத்தினிடத்திலே, சுத்தியில் ரஜதம் போல, மூலப்

பிரகிருதி யென்னும் ஒரு சத்தி உண்டு. அந்த மூலப் பிரகிருதியும், விகிர்த குண மாகிய மூக் குணத்தோடு கூடியிருக்கும். அந்தப் பிரகிருதி யின் சத்துவ குணத்தை மாயை யென்றும், சர் வக்ஞ வுபாதி யென்றும், ஈசுர காரண சரீர மென் றுஞ் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப் பிரதிவிம்பம் போலப் பிரமம் சுலட் சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்யத்தைச் சர்வக்ஞ னாகிய ஈசுர னென்று சொல்லப்படும். இந்தச் சத்துவ குண மாயையி னிடத்திலே, சத்துவத்தில் சத்துவம், சத்துவத் தில் ரஜஸ், சத்துவத்தில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. இவைகளில், சத்துவத்தில், சத்துவம் பிரதான மாகும்போது, அதில் பிரதிவிம் பித்த ஈசுரன் சகத்தை இரக்ஷிக்கையினால் விஷ்ணு வென்றும், சத்துவத்தில், ரஜஸ் பிரதான மாகும் போது, அதில் பிரதிவிம்பித்த ஈசுரன், சகத்தைச் சிருஷ்டிக்கையினால் பிரமா வென்றும் சத்துவத்தில், தமஸ் பிரதான மாகும் போது, அதில்

பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை உபசம்மாரம் பண்ணுகையினால் உருத்திர னென்றுஞ் சொல்லப்படுவன்.

இப்படி மூலப் பிரகிருதியின்
சத்துவ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப் பிரகிருதியின் இராஜோ குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து, அவித்தைக ளென்றும், சீவ காரண சரீரங்க ளென்றும், ஒன்றற் கொன்று தார தம்மிய மாகச் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிடத்திலும் மலின சலப் பிரதிவிம்பம் போலப் பிரம சைதந்யம் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்யங்களைக் கிஞ்சிக்ஞ ரென்றும், ஜீவ சிதாபாச ரென்றும், பிராக்ஞ ரென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிடத்திலேயும் ரஜஸில் சத்துவம், ரஜஸில் ரஜஸ், ரஜஸில் தமஸ் என மூன்று குணங்கள் உண்டு. இராஜஸில் சத்துவம் பிரதான மாகும் போது, அதில் பிரதிவிம் பித்த சிதாபாசன் தத்துவ ஞாந நிஷ்ட னுவன்.

இராஜஸில் ரஜஸ் பிரதாநமாகும் போது, அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் காமக் குரோத பரனுய்க் கர்ம நிஷ்ட னுவன். இராஜஸில் தமஸ் பிரதாநமாகும் போது, அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கம் ஆகிய இவைகளை யடைவன்.

இப்படி மூலப் பிரகிருதியின்
இரஜோ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப் பிரகிருதியின் தமோ குணத்திற்கு, ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சத்திகள் உண்டு. இவ் விரண்டில், ஆவரண சத்தியானது தத்துவ ஞாநியையும், ஈசுரனையுந் தவிர, மற்றைச் சீவருக் கெல்லாம் சரீரத் திரயம் சிதாபாசன் சாக்ஷி சைதந்நியம் என்னு மிவைகளின் ஒன்றற் கொன் றுள்ள பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனுல் மறைபட்ட சீவர் இருபத் தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நா னென் றபிமாநிப்பர். இந்த அபிமாநத்தை, அகங்காரக் கிரந்தி யென்றும், சம்சார பந்த மென்றுஞ் சொல்

லப்படும். சற் குரு கடாக்ஷத்தினாலே, இந்த ஆவர ணம் நீங்கி, இருபத் தொன்பது தத்துவங்களின் ஒன்றற் கொன் றுள்ள பேதந் தெரிகின்றதே முக்தி.

## இப்படி ஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

இனி, விக்ஷேப சத்தியினின்றும் சத்த தன் மாத்திரையான ஆகாசந் தோன்றிற்று. ஆகாசத் தினின்றும் பரிச தன்மாத்திரை யான வாயு தோன் றிற்று. வாயுவினின்றும் ரூப தன்மாத்திரையான அக்கினி தோன்றிற்று. அக்கினியினின்றும் ரஸ தன்மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவி னின்றும் கந்த தன்மாத்திரை யான பிருதிவி தோன்றிற்று. இந்தச் சூக்ஷ்ம பஞ்ச பூதத்திற்குக் காரணமா யிருக்கின்ற விக்ஷேப சத்தியினிடத்தி லே, தமஸில் சத்துவம், தமஸில் ரஜஸ், தமஸில் தமஸ் என்னு மிவை அற்பக் கருவாக விருந்தபடி யால், அதன் காரிய மாகிய இந்தத் தன்மாத்திரைக

ளான பஞ்ச பூதங்களும் முக் குணங்களுடனே பிறந்தன. இந்தப் பஞ்ச பூதங்கட்குத் தந்மாத்திரைக ளென்றும், அபஞ்சீகிருத பூதங்க ளென்றும், சூக்ஷ்ம பூதங்க ளென்றும், முக் குண பூதங்க ளென்றும், சாஸ்திரங்களில் நாமஞ் சொல்லப்படும்

இந்தச் சூக்ஷ்ம பூதங்களினின்றும் சூக்ஷ்ம சரீரங்களும், ஸ்தூல பூதங்களுந் தோன்றும். அஃதெங்ஙன மெனின்:-ஆகாச முதலான பஞ்ச பூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது அந்தக் கரணம். இந்த அந்தக் கரணத்தில், ஆகாசத்தின் அம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக் கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கும் இடங் கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற * விருத்திக்கு † உள்ள மென்று பெயர். இந்த அந்தக் கரணத்தில், வாயுவி

---

* விருத்தி - பரிணமம் † உள்ளம் - தேஜஸ் என்றும் பாட முளது.

னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக் கரணமும் வாயுவைப் போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மந மென்று பெயர். இந்த அந்தக் கரணத்தில்,அக்கினியி னம்சங் கூடின தற் கடையாளம், இந்த அந்தக் கரணமும் அக்கினி யைப் போல ஈ தின்ன தென்று விளக்குவிக்கின் றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி யென்று பெயர். இந்த அந்தக் கரணத்தில், அப்புவி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக் கரணமும் அப்புவைப் போல விஷயங்களிற் பற்றி இழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத் திக்குச் சித்த மென்று பெயர். இந்த அந்தக் கரணத்தில், பிருதிவியி னம்சங் கூடினதற் கடை யாளம், இந்த அந்தக் கரணமும் பிருதிவியைப் போலக், கடிந மாக நின்று நா னென் றபிமாநிக் கின்றது ; இந்த அபிமாந விருத்திக்கு அகங்கார மென்று பெயர்.

இன்னும், ஆகாச முதலான பஞ்ச பூதங்களி னுடைய சத்துவாம்சத்திலே, பூதத்திற் கொவ்

வொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரிய மென்று சொல்லப்படும். இவைகளில், சுரோத்திரம் ஆகாசத்தினம்ச மானபடியால் ஆகாசத்தின் குணமான சத்த மாத்திரத்தை அறியும். துவக்கு வாயுவினம்ச மானபடியால் வாயுவின் குணமான பரிசு மாத்திரத்தை அறியும். சக்ஷு அக்கினியி னம்ச மானபடியாய் அக்கினியின் குண மான ரூப மாத்திரத்தை அறியும். சிங்குவை அப்புவி னம்ச மான படியால் அப்புவின் குண மான ரஸ மாத்திரத்தை அறியும். கிராணம் பிருதிவியி னம்ச மான படியால் பிருதிவியின் குணமான கந்த மாத்திரத்தை அறியும். இப்படி ஐந்தும் ஒன்றோ டொன்று கூடாதபடியால் ஒன்று மற் றென்றின் குணத்தைக் கிரகிக்க வறியாது. அந்தக் கரணதில், ஐந்து மாத்திரையும் ஒன்ருய்க் கூடினது கொண்டு ஐந் திந்திரியங்களினாலும், ஐந்து விஷங்களையும் அறியும். இந்தச் சத்துவ குணத்தி லுண்டான அந்தக் கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும்,

ஆகப் பத்தும் சத்துவாம்ச மானபடியால் ஞாந சாதந மாயின.

இன்னும் ஐந்து பூதங்களி னுடைய இராஜோாம் சத்திலே, பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்ருகக் கூட்டி வைத்தது வியாநாதி பஞ்ச வாயுக்கள்- இவைகளில், வியாந வாயு ஆகா சத்தி னம்ச மானபடியால் ஆகாசத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித் திருக்கும். பிராண வாயு வாயுவி னம்ச மானபடியால் வாயுவைப் போல இருதயத்தி லிருந்து நாசிகாதி பரியந்தம் அலையும். அபாந வாயு அக்கினியி னம்சமானபடியால் அக்கிநி யைப் போலச் சாடராக்கிநி யாக உஷ்ணித்துக் கொண்டு குதத்தைப் பற்றி நின்று; உண்ட வந்ந பாநாதிகளைச் சீரணிப்பிக்கும். சமாந வாயு அப் புவி னம்ச மானபடியால் சரீர நடு வான நாபித் தாநத்தினின்று உண்ட அந்ந ரசங்களை அப்பு வைப் போல இழுக்கும். உதாந வாயு பிருதிவியி னம்ச மானபடியால் கண்டத்தைப் .பற்றிப்பிருதி வியைப் போலக் கடிந மாக நின்று, உண்ட அந்ந

பாநாதிகளைக் கடையும். இந்தப் பஞ்ச வாயுக் களையு மல்லாமல், வாந்திபண்ணுவிக்கின்றது நாக னென்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்ம னென்றும், குறு குறுத்துத் தும்மச் செய்கின்றது கிரிகர னென்றும், கொட்டாவி கொள்ளச் செய் கின்றது தேவ தத்த னென்றும், வீங்கச் செய்கின் றது தநஞ்சய னென்றும், வேறே ஐந்து வாயுக்க ளுண் டென்று சிலர் சொல்லுவார். இவ் வைந் தும் பிராண னுடைய தொழி லானபடியால் வே றல்ல.

இன்னும், ஆகாச முதலிய பஞ்ச பூதங்களி னுடைய இரஜோம்சத்திலே, பூதத்திற்கு ஒவ் வொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரிய மென்று சொல் லப்படும். இவைகளில், ஆகாசத்தி னிடமாக வாக்கு வசநிக்கும். வாயுவி னிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும். அக்கினியி னிடமாகப் பாதம் நடக்கும். அப்புவி னிடமாகப் பாயுரு மல சலாதிகளை வெளியிலே தள்ளும். பிருதிவியி னிட

மாக உபஸ்தம் சுகத்தைப் பண்ணும்; இந்த ஐந்துந் தனித் தனியே இருந்தது கொண்டு மறு தொழில் செய்யமாட்டாது, வியாநாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும், ஒன்ருய்க் கூடினது கொண்டு, கர்மேந்திரியம் ஐந்தின் வழியினுலும்,ஐந்து தொழில் களையுஞ் செய்து முடிக்கும், இந்த வாயுக்களைந் தும், கர்மேந்திரியங்க ளைந்தும், ஆகப் பத்தும் இரஜோம்ச மானபடியினுல் கிரியா சாதந மாயின. அந்தக் கரணம்-5, ஞாநேந்திரியம்-5, வாயுக்கள்-5, கர்மேந்திரியம்-5 ஆக இரு பது தத்துவமுஞ் சூக்ஷ்ம சரீர மென்று சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம சரீரத்தை மாயாப் பிரதிவிம்ப னுக விருக் கின்ற ஈசுரன், அவித்தையாப் பிரதிவிம்ப ராகிய சீவர்கள் அநேக ராகையால், ஒவ் வொருவருக்கு ஒவ் வொரு சரீரமாகச் சிருஷ்டித் தளித்தான்.

இப்படிச் சூக்ஷ்ம சரீர கற்பனை
சொல்லப்பட்டது.

இனி, ஸ்தூல பூத வுற்பத்தி சொல்லுகின் ரேம்; அஃது தெங்ஙன மெனின்:—தமோம்சமா

யிருக்கின்ற ஐந்து பூதங்களையும், ஒவ் வொன்றை இரண் டிரண்டாகப் பகுத்து, முதற் பாதி ஐந்தை யும் ஒவ் வொன்றை நான்கு நான் காகப் பகுத்து, இரண்டாம் பாதி ஐந்தில், தன் னம்சத்துடனே கூட்டாமல் மற்றை நான்கு பூதங்களுடன் அரைக் கால் அரைக்கால் மாத்திரை யாகக் கொடுக்கின்றது பஞ்சீகரண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே ஆகா சத்திலே, பரிச ரூப ரஸ கந்தம் ஆகிய நான்கு குணங்களும் வியாப்பிய மானபடியால், அதிருசிய மாய்ப் போக,நிச குண மாகிய சத்தந் திருசிய மாம். வாயுவிலே, ரூப ரஸ கந்தம் ஆகிய மூன்று குணங் களும் வியாப்பிய மானபடியினால் அதிருசியமாய்ப் போகக், காரண குணமாகிய சத்தமும், நிச குண மாகிய பரிசமுந் திருசிய மாம். அக்கினியிலே, ரஸ கந்த மாகிய இரண்டு குணங்களும் வியாப்பிய மானபடியினால் அதிருசியமாய்ப் போகக், காரண குணங்க ளாகிய சத்த பரிசமும், நிச குண மாகிய ரூபமுந் திருசிய மாம். அப்புவிலே, கந்த குணம்

வியாப்பிய மானபடியினல் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்க ளாகிய சத்த பரிச ரூபமும், நிச குண மாகிய ரஸமுந் திருசிய மாம். பிருதிவியிலே, காரண குணங்க ளாகிய சத்த பரிச ரூப ரஸமும், நிச குண மாகிய கந்தமும் திருசியமாம்.

முன் சூக்ஷ்ம பூதங்களி னின்றும் சூக்ஷ்ம சரீரங்கள் தோன்றினற் போலப், பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூல பூதங்களினின்றும், ஆறு தத்துவ மாய், நால் வகைப் பிறப் பாய், மூவகைச் சாதி யா யிருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் தோன்றின; இவற்றுள், ஆறு தத்துவங்க ளாவன:- சர்மம் உதிரம் மாம்சம் சநாயு அத்தி மச்சை இவைக ளாம். நால்வகைத் தோற்றங்க ளாவன:-சராயுஜம் அண்டஜம் சுவேதஜம் உத்பிஜ்ஜம் இவைக ளாம். மூவகைச் சாதிகளாவன:- இக லோக பர லோக புத்தி இரு வகையுங் கொடுக்கின்ற மநுட சரீரம் உத்தம சாதி, பரலோக புத்தியை மறைத்து, இக லோக புத்தி மாத்திரங் கொடுக்கின்ற பசு பக்ஷி முதலானவை மத்திம சாதி. இரண்டு லோக

புத்தியையும் மறைத்திருக்கின்ற மரம் கொடி செடி முதலியவை அதம சாதி. இப்படிப் பிருதிவி தத்துவமா யிருக்கின்ற பூ லோகத்திற் கண்டாற் போல, அப்பு அக்கினி வாயு ஆகாசம் என்னப் பட்ட தத்துவங்க ளாய் நிரை நிரையே யிருக்கின்ற பிதிர் லோகம் தேவ லோகம் யட்ச கந்தர்வ சித்தர் லோகங்களிலும், நட்சத்திர மாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான பிதுர்க்கள். சூரியன் முதலான தேவதைகள், கந்தருவர் சித்தர் என்னப் பட்டவர்கள் உத்தம சாதி. காம தேநு ஐராவதம் அந்நம் கருடன் முதலானவை மத்திம சாதி. கற்பக விருட்சம் பாரிசாதம் முதலானவை அதம சாதி. இந்தத் தூல சரீரமே அந்ந மய கோசம், சூக்ஷ்ம சரீரம் மூன்று கோசங்களா யிருக்கும். அஃதெங்ஙன மெனின்:—பிராண வாயுவும், கர்மேந்திரியங்களுங் கூடிப் பிராண மய கோசம், மநதும், ஞாநேந்திரியங்களுங் கூடி மநோமய கோசம்,

புத்தியும்,ஞானேந்திரியங்களுங் கூடி விஞ்ஞான மய கோசம், காரண சரீரமே ஆநந்த மய கோசம்.

இப்படிப் பஞ்ச கோசஞ் சொல்லப்பட்டன.

ஆறு தத்துவங்களா யிருக்கின்ற ஸ்தூல சரீரத்திலே, இருபது தத்துவங்களா யிருக்கின்ற சூக்ஷ்ம சரீர மிருக்கின்றது. அஃ தெப்படி யெனின்:- கர்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்ஙுவையும், வாயி லிருக்கும். உதாந வாயுவும் மநதும், கண்டத்திலே யிருக்கும். பிராண வாயுவும், புத்தியும், இருதயத்திலே யிருக்கும். சமாந வாயுவும், சித்தமும், நாபியி லிருக்கும் அபாந வாயுவும், பாயுருவும், குதத்தி லிருக்கும், வியாந வாயுவும், ஞானேந்திரியங்களுள் துவக்கும் அகங்காரமும், சர்வாங்கமும் வியாபித் திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சக்ஷுரிந்திரியமும், காதிற் குள்ளே சுரோத்ரேந்திரியமும்,மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும்,கழுத்திற்கு மேலே தனித் தனியே யிருக்கும். கழுத்

திற்குக் கீழே, கை கால் குய்யங்களில், பாணி பாதம் உபஸ்தம் மூன்றுந் தனித் தனியே யிருக்கும். இப்படித் தூல சரீர தத்துவங்கள் ஆறு, அதிற் குடிபுகுந்த சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபது; ஆகத் தத்துவங்கள் இரு பத் தாறும், பஞ்ச பூதங்களின் காரிய மானபடியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீர மென்று சொல்லப்படும்.

அவித்தையிற் பிரதிவிம்பித்த சிதாபாசன், சாக்கிரத்திலே, இந்த இருபத் தாறு தத்துவங்களுடனே கலந்து நின்றபோது, விசுவ னென்றும், வியாவகாரிக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன். சொப்பநத்திலே, தூல சரீரத்தை விட்டு, அந்தக் காரணத்துடனே கூடி நின்ற போது, தைஜச னென்றும்,பிராதிபாசிக ஜீவ னென்றும்,சொப்பந கற்பித னென்றுஞ் சொல்லப்படுவன். சுழுத்தியிலே, காரிய சரீர தத்துவங்கள் இருபத் தாறையுங் கைவிட்டுக், காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும் போது, பிராக்ஞ னென்றும், பாரமார்த்திக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன்.

பிரம சைதந்நியமும், சாக்கிரத்திற்குச் சாக்ஷியா யிருக்கும் போது, சீவாத்மா வென்றும், சொப்பநத் திற்குச் சாக்ஷியா யிருக்கும் போது, அந்த ராத்மா வென்றும், சுழுத்திக்குச் சாக்ஷியா யிருக்கும் போது, பரமாத்மா வென்றும், அவஸ்தாத் திரய சாக்ஷியா யிருக்கும் போது, ஞாநாத்மா வென் றும், கூடஸ்த னென்றுஞ், சொல்லப்படும்.

**இப்படிச் சீவனுக்கு மூன்று சரீரங்களும், மூன் றவஸ்தைகளுஞ் சொல்லப்பட்டன.**

**இனி, ஈசுரனுக்கு மூன்று சரீரங்களும், மூன் றவஸ்தைகளுஞ் சொல்லும்படி :**

கற்பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோன்று கின்ற தூல பஞ்ச பூதங்களும், அந்தப் பூதங்களி லே தோன்றிய மூன்று சாதியா யிருக்கின்ற தூல சரீர சமஷ்டியுங் கூடி, ஈசுர தூல சரீர மென்றும், விராட் டென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சாக்கிராவஸ்தையைப் பொருந்துகின்ற

ஈசுரன், வைசுவாநர னென்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சைதந்யம் பிரமா வென்றுஞ் சொல்லப்படும். சூக்ஷ்ம பூதங்க ளைந்தும், அந்தப் பூதங்களிலே தோன்றிய,சூக்ஷ்ம சரீர சமஷ்டியும் கூடி, ஈசுர சூக்ஷ்ம சரீர மென்றும், இரண்யகர்ப்ப மென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சொப்பநாவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், சூத்ராத்மா வென்றும், இந்த இரு வகைக்கும் அதிஷ்டாந சைதந்யம் விஷ்ணு வென்றுஞ் சொல்லப்படும். இந்தத் தூலம் சூக்ஷ்மம் இரண் டின் வாசனை யுடனே கூடியிருக்கின்ற மாயை, ஈசுர காரண சரீர மென்றும், அவ்யாகிருத மென் றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சுழுத்தி யவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், அந்தரி யாமி யென்றும், இந்த இரு வகைக்கும் அதிஷ் டாந சைதந்யம், உருத்திர னென்றுஞ் சொல்லப் படும். சீவன், தன் மூன் றவஸ்தைகளிலும், தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற இருபத் தேழு தத்துவங்களுடனும், நா னென்று கலந்து நிற்கின்

றது போல, ஈசுரனும் தன் மூன் றவஸ்தைகளி லும்; தன் மூன்று சரீரங்களா யிருக்கின்ற முப் பத் திரண்டு தத்துவங்களுடனும் கலந்து நிற்பன். ஆகையினாலே, சீவ சிதாபாசன் தன் சரீர மாத் திரமே கலந்து நிற்பன். ஈசுரன் தன் சரீர மாகிய சகல சரீரங்க ளோடும், சகல பிரபஞ்சங்களோ டும், கலந்து நிற்பன், இந்த இரு வகைக்கும் சாக்ஷியா யிருக்கின்ற பிரம சைதந்யமும், சகல சரீரங்களிலும், சகல பிரபஞ்சங்களிலும், நிறை ந்து, அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிர மித்து, எல்லை யற் றிருக்கும்.

சீவனுக்குத் தூல சரீர வியவகாரத்திற்கு, அந்ந மய மான சட் கோச தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் - 20, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-31. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்கு, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சீவன் ஈசுவரன் அவித்தை வித் தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-25. காரண சரீர வியவகாரத்திற்கு, சீவன் ஈசுரன் அவித்தை

வித்தை பிரமம்-5. சீவ வியவகாரத்திற்கு, சீவன் ஈசுரன் பிரமம்-3. சாக்ஷி வியவகாரத்திற்கு, சாக்ஷி-1. ஈசுர னுக்குத் தூல சரீர வியவகாரத் திற்கு, சமஷ்டி அந்ந மய கோச தத்துவங்கள்-6. சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சமஷ்டி சீவன் அவித்தை-2, ஈசுரன் வித்தை பிரமம்-3 தூல பூதங்கள்-5, ஆகத் தத்துவங்கள்-36. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்குச், சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவஙகள்-20, சமஷ்டி சீவன் அவித்தை-2 சூக்ஷ்ம பூதங்கள்-5, வித்தை ஈசுரன் பிரமம்-3 ஆகத் தத்துவங்கள் 30. காரண சரீர வியவ காரத்திற்கு, வித்தை ஈசுரன் பிரமம்-3. ஈசுர வியவகாரத்திற்கு, ஈசுரன் பிரமம்-2. பிரம வியவ காரத்திற்குப், பிரமம்-1. இந்திரிய வியகாரத் திற்கு, இந்திரியம்-1. சட் கோச தத்துவங்கள்-6, அந்தக் கரணம் 5, வாயு-5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள் 22. மநோ ராச்சிய வியவகாரத்திற்கு, அந்தக் கரணம்-5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-10.

இப்படித் தத்துவங்களி னுடைய
தோற்றமும், நிலையுஞ் சொல்லப்பட்டன.

## இனித், தத்துவங்கள் ஒடுங்குகின்ற வழி சொல்லுகின்றோம்.

சகல சீவரிடத்திலு மிருக்கின்ற தூல சரீரங்க ளனைத்தும். தமக்கு ஆதார மான தூல பூதங்களிலே மடிந்து பூத மாத்திர மாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும், பஞ்சீகரணம் விட்டுத் தந் மாத்திரைக ளான தமோ குண பூதங்க ளாக மிஞ்சும். அப் போது கேவலம் இரண்ய கர்ப்பாவஸ்தை யென்று சொல்லப்படும். சூக்ஷ்ம சரீர தத்துவங்க ளிருபதுங் கட்டு விட்டுப் பூதங்களி னுடைய சத்துவ குணமும், இரஜோ குணமுமாக ஒடுங்கும்; அஃ தெங்ஙன மெனின்:—சகல பிராணிக ளிடத்து மிருக்கின்ற அகங்காரமும், கிராணேந்திரியமும், உதாந வாயுவும், உபஸ்தேந்திரியமும், பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும், சிங்ஙுவையும், சமாநனும், பாயுருவும், அப்புவில்

ஒடுங்கும். புத்தியும், சக்ஷுவும், அபானனும், பாதமும், அக்கினியில் ஒடுங்கும். மனதும், தொக்கும், பிராணனும், பாணியும், வாயுவில் ஒடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியானனும், வாக்கும், ஆகாசத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும். இந்தச் சூக்ஷ்ம பூதங்களும், பிருதிவி அப்புவில் கரைந்து ஒடுங்கும். அப்புவும், அக்கினியிற் சுவறி ஒடுங்கும். அக்கினியும், விளக்குப் போல, வாயுவி லணைந்து ஒடுங்கும். வாயுவும், ஆகாசத்திலே ஓய்ந்து ஒடுங்கும். ஆகாசமும், விக்ஷேப சத்தியில் ஒடுங்கும். ஆவரண சத்தியும், விக்ஷேப சத்தியும், மூலப் பிரகிருதியின் தமோ குண மாத்திர மாய், ஆல மரம் ஆலம் விரையில் ஒடுங்கினாற் போல, இன்னும் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக, மாயையிலும், அவித்தையிலும், ஒடுங்கும். இந்த மாயையும், அவித்தையும், அதி நுண்மை யான மூலப் பிரகிருதி யென்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்த விந்துவும், பரம் மென்கின்ற

பெயர் போய்ப் பழுதை யாகக் கண்டாற் போலத் தனக்கு அதிஷ்டாந சைதந்ய மான பிரம சைதந்ய மாத்திரமாக ஒடுங்கும். இப்படிப். பொய் யெல்லாம் மெய்ப் பொருள் ஒன்றாகக் கண்டு, அதுவே சுபாவ சித்தமாய், நிசமா யிருக்கின்ற தன் வடி வெனக் கண்டு தெளிந்து, கவலை கெட் டிருக்கின்றவனே சீவன் முத்தன்.

## இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித் தோன்றி ஒடுங்கின தத்துவங்கள்- 36. அவை யாவன:—பூதங்கள்-5, ஸ்தூல சரீர தத்துவங்கள்-6, சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, காரண சரீர மான மாயை அவித்தை-2, இவற்றில் பிரதிவிம்பித்த சீவன் ஈசுரன்-2, இவைகட் கெல் லாம் அதிஷ்டாந சைதந்யமா யிருக்கின்ற * பிர மம்-1, இவை யாம். இவைகளில், பூதங்கள்-5, மா

* பிரமத்திற்குத் தோற்ற மொடுக்கங் கூறி னது நாம கற்பனையைப் பற்றி யென்க.

யை-1, மாயாப் பிரதிவிம்ப ரான ஈசுரன்-1, பிர மம்-1 ஆக, இந்த எட்டும் சகல பிராணிகளுக்குஞ் * சமுதாய மாக வநுபவிக்கப்படும். மற்றை இரு பத் தெட்டும், அவன் அவனுக்கு † பிருதக் காக வநுபவிக்கப்படும். அஃ தெங்ஙன மெனில், பிரு திவி தத்துவம் ஒன்று இறக்கில், எல்லாருக்கும் ஆதார மில்லை. மழை மறுக்கில், எல்லாருக்குஞ் சல மில்லை. தேயு வில்லா திருந்தால்,பாக மில்லை. வாடை தென்றல் இல்லாவிட்டால், வாயு வியக்க மில்லை. ஆகாசம் இறக்கில், ஒருவருக்கும் அவ காச மில்லை. மாயையும், மாயாப் பிரதிவிம்பரும் இறக்கில், சகல சமயங்களுக்குந் தெய்வ மில்லை. பிரம மில்லையோ, ஒருவருக்கும் அறி வில்லை; ஆகையால்,இந்த எட்டும் எல்லாருக்குஞ் சமுதாய மாம். பிருதக்கு எங்ஙன மெனின்? ஒருவனுக்கு ஸ்தூல சரீரம் இறக்கில், எல்லாருக்கும் ஸ்தூல சரீ ரம் இறவாதபடியினாலும், சூக்ஷ்ம சரீரத்தில் ஒரு

---

* சமுதாயம்-பொது. † பிருதக்கு-வேறு.

வனுக்கு அங்க * வைகல்யம் வந்தால், எல்லாருக்கும் வராதபடியினாலும், முத்தரா யிருந்த சுகர் வாம தேவர் முதலியோருக்கு, அவித்தையும், சீவனும், இறந்துபோ யிருக்க, மற்றையோருக் கெல்லாம் அவித்தையும், சீவனும், இறவாதபடினாலும், இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களும், அவ னவனுக்குப் பிருதக் கென்பதிலே சந்தேகமே யில்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத் தாறில், எப்போதும், தா னாகவே காணப்படுகிற தத்துவம் ஒன்று. எப்போதும் தனக் கந்நிய மாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு. தா னாகவும், தனக் கந்நிய மாகவும், அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள் இரு பத் தெட்டு. அஃ தெங்ஙன மெனில், அவஸ்தாத் திரய சாக்ஷியா யிருக்கின்ற பிரம சைதந்யம், எல்லா வவஸ்தைகளிலுந், தானாக விளங்குகையினாலும், மற்றைத் தத்துவங்கள் போலத்

---

* விகலம்-வைகல்யம்-குறைவு.

தனக் கந்நிய மாக விளங்காதபடியினாலும், அந்தப் பிரம சைதந்யம் ஒன்றுமே தா னாகக் காணப்படுகிறது. பஞ்ச பூதங்கள், மாயை, மாயாப் பிரதிவிம்பர் ஆக எழும் தந் தந் தொழி லான வெட்டு, கொத்து, உழவு, பஞ்ச கிருத்தியம், தசாவதார முதலானவை, ஒரு காலும், தன் னுடைய தொழி லாகக் காணப்படாதபடியினாலே, தனக் கந்நியங்களே யல்லாமல் தா னாக மாட்டா. மற்றை இருபத் தெட்டுத் தத்துவங்களுள்ளே, நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிருகஸ்தன், நான் வாநப் பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஆண், நான் பெண், நான் கறுவல், சிவலை, கட்டையன், நெட்டையன், நான் பருத்தேன், இளைத்தேன் என்று தானாக வழங்குகிற, ஸ்தூல சரீரம் ஆறு தத்துவங்களும், மற்றொரு வேளையிலே, தனக்குப் புறம்புபட்டு என் மாடு என் கன்று என்றாற் போல, என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்

தனை நா னாயிற் றென்று, தான் வேறு தூல சரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும், "நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், போகித் தேன், கொடுத்தேன், வாங்கினேன், நடந்தேன், புசித்தேன், சிந்தித்தேன், நிச்சயித்தேன், இந் தப் பஞ்சத்திற்குச் சீவித்தேன்" என்று தா னாக வழங்குசிற சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் இருபதும், மற் றொரு வேளையிலே, தனக்குப் புறம்புபட்டு, "என் வீடு, என் உடைமை" என்றாற் போல, "என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு, என் கை, என் கால், என் மநம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என் பிராணன்" என்று, தான் வேறு, அவைகள் வேறாக வழங்குகிறபடியி னாலும் "நான் அறிவேன், அறியேன்" என்று, தா னாக வழங்குகிற அஞ்ஞாநமும், சிதாபாசனும், மற் றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு, "என் அஞ்ஞாநம், என் சீவன்" என்று, வழங்கக் கண்டபடியினாலும். இந்த இரு பத் தெட்டுத் தத் துவங்களும், தா னாகவும், தனக்கு அந்நிய மாக வும், வழங்குகின் றது சித்தம்.

இப்படிச்சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கேட்கும்படி :

இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களுந் தானால், சாக்ஷியைப் போல, ஒரு தன்மை யாகத் தோற்ற வேண்டுமே யல்லாமல், பஞ்ச பூதங்களைப் போலத், தனக் கந்நிய மாகக் காணக் கணக்கில்லை. இந்த இருபத்தெட்டும், தனக் கந்நியமே யானால், எப் போதும் புறம்புபட்டே இருக்க வேண்டு மல்லாமல், தா னாக வழங்கக் கணக்கில்லை. தானு மாய்த், தனக் கந்நியமுமாய் இருக்கு மென்கிறது, "இருட் டாதித்தன்" என்றாற் போலும், "வேளாள தீக்ஷிதன்" என்றாற் போலும் விருத்தமா மென்னுஞ் சங்கைக்கு:—பரமார்த்த மாகத் தான் என்கின்றது ஒரு வகையும், அத்தியாசத்தினாலே தான் என்கின்றது ஒரு வகையும், ஆக இரு வகையும் உண்டு. சாக்ஷி சைதந்யத்தைத், தான் என்கின்றது, பரமார்த்த மல்லாமல் உபசார மல்ல. தனக் கந்நிய மா யிருக்கின்ற

இந்த இருபத்தெட்டையும், தானென்கின்றது, கட்டையைக் கள்ளனென்றாற்போலும், பழுதையைப் பாம்பென்றாற் போலும், புத்திர தாராதிகளைத் தானென்றாற் போலும், மயக்கமேயல்லாமல், உண்மையல்ல. ஆகையினால், அஞ்ஞான காலந் தொடங்கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள்-7- இப்போது இப்படி விவேகம் பண்ணின பின், தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள்-28 ஆக இந்த 35 தத்துவங்களையும், அததற்குச் சொன்ன, குணம் குறிகளுடனே கூடக் காண்கின்ற அறிவானது, கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவேயிருந்து, கடத்தைப் பார்க்கின்றது போல, அவைகளை அறிகின்றதென்றும், முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுவே தானென்றும், அதுவே பரமசிவமென்றும், கலக்கமறத் தெளிந்தவனே, சிவ தரிசன முடைய சீவன் முத்தனென்று சொல்லப்படுவனென் றுத்தரம்.

இப்படிப் பிரமமே தாமென்றும், மற்றை முப்பத்தைந்து தத்துவங்களும், தமக் கந்நிய

மென்றும், பிரித் தறியாத அவிவேகிகள், அகங்காரக் கிரந்தியினாலே, புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கிறோம், என்கிற மூடகரம் போல, இந்த இருபத் தெட்டி னுடைய தொழில்களையும், தம் தொழி லென்று மயங்குகின்றபடியினாலே, இந்த இருபத் தெட்டினாலும், ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாற் கட்டப்பட்டு, அந்தக் கர்மத்தின்படியே சநந மாணாதி சம்சாரத்திலே அடிபடுகிறோ மென்று மயங்குவர். பிரமசைதந்நியமே தா னென்றும், மற்றை முப் பத்தைந்தும் தா னல்ல வென்றுந், தெளிந்த விவேகியானவன், அகங்காரக் கிரந்தி யற்றபடியினால், இந்த இருபத் தெட்டி னுடைய தொழில்களையும் நான் செய்ய வில்லை யென்றும், இந்த இருபத் தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்க வில்லை யென்றும், திடப்படத் தேறி மயக்க மற் றிருக்கின்றபடியினால், இந்த இருபத் தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும்

விடுபட்டுக் கர்ம மில்லாதபடியினால், சநந மரணாதி சம்சார மில்லாமல், முத்த னாய்ப் பிரம மாத்திர மாகவே யிருப்பன். இவனைச் சீவந் முத்த னென்றும், திடப் பிரக்ஞ னென்றும், அதிவர்ணாச்சிரமி யென்றும், குணாதீத னென்றும், பகவற் பத்த னென்றும், பிராமண னென்றும், வாசிட்ட முத லிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோக்ஷ மடையக் கடவர்.

நாநா ஜீவ வாதக் கட்டளை

முற்றிற்று.

---

